தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1993 மார்ச் 18, வியாழக்கிழமை.

பங்குனி 5, ஆங்கீரச--திருவள்ளுவர் ஆண்டு 2024.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தவம் செய்வார் தம்கருமம் செய்வார்மற்று அல்லார்
அவம் செய்வார் ஆசையுட் பட்டு".

தவம் செய்பவர் மட்டுமே தம் கடமையைச் செய்பவராவார்; அவர் அல்லாத மற்றவர்கள் ஆசையில் அகப்பட்டு வீணான செயல் செய்பவராவர்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 121, திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு நிதியமைச்சர்.

121—

புதுப்பதி, முருகன்பதி ஆகிய பகுதிகளில் தனி வாக்குச் சாவடி அமைத்தல்.

*16080—திரு. கே. பி. ராஜு:
மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

கோயம்புத்தூர் மாவட்டம் 'பேரூர் தொகுதி' புதுப்பதி, முருகன்பதி ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் 5 கிலோ மீட்டர் தூரம் சென்று ஓட்டுப் போட வேண்டியிருப்பதால் அவர்களுக்குத் தனியாக வாக்குச்சாவடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நிதியமைச்சர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

[1993 மார்ச் 18

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நடமாடும் பல்கலைக் கழகம் மாண்புமிகு நாவலர் அவர்கள் எடுத்தவுடன் இல்லை என்று சொல்லிவிட்டார். அந்தக் கிராமத்தில் பஸ் வசதி கிடையாது. பஸ்ஸை விட்டு விடுவோம். ரோடு இல்லை. ரோடு போடுவதற்கு வழியும் இல்லை. இடையிலே இரயில்வே ட்ராக் வருவதால் அதற்கு மத்திய அரசிடம் பெர்மிஷன் கேட்க வேண்டிய காரணத்தினால் ரோடு போட முடிவதில்லை. ஆகவே, அங்கே பஸ் வசதியும் இல்லை. அந்த முருகன்பதி, புதுப்பதி போன்ற மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு வாகனங்களும் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வாக்குகளை அளிக்கின்ற அந்த மக்கள் வாக்குச் சாவடிகளுக்கு வருவதென்றால் 5 கிலோ மீட்டர் நடந்து வர வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, மலைவாழ் மக்களுக்கு என்று அங்கு ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்திலேயாவது—புதுப்பதியில் புது வாக்குச்சாவடி அமைக்கின்ற உத்தேசம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டம், 107 பேரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள புதுப்பதி மற்றும் முருகன்பதி வாக்காளர்களுக்கு தனி வாக்குச்சாவடி அமைத்துக் கொடுப்பதற்கான செயற் குறிப்பு தற்போது இல்லை என்றுதான் குறிப்பிட்டேன். செயற் குறிப்பு இப்போது இல்லை. ஏனென்றால் பேரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட புதுப்பதியில் 132 வாக்காளர்களும் முருகன்பதியில் 418 வாக்காளர்களும் உள்ளனர். சின்னநவக்கரை ஊராட்சி ஒன்றிய பள்ளியில் அமைந்துள்ள 111 மற்றும் 110 எண் உள்ள வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க வேண்டும். இவ்விரு பகுதிகளில் வாக்காளர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. ஒரு வாக்குச்சாவடி என்றால் குறைந்தது 750 வாக்குகளாவது இருக்க வேண்டும். இரண்டு ஊர்களிலும் ஒரு வாக்குச்சாவடி வைக்கின்ற அளவுக்கு அவை தனி வாக்குகள் பெற்றவைகள் அல்ல. இவ்விரு பகுதிகளில் வாக்காளர்கள் மிகக் குறைவாக உள்ளதால் இவ்வாறு சற்று தூரத்தில் உள்ள வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வகையிலேதான் இவர்கள் அந்த சின்னநவக்கரை என்ற ஊராட்சி ஒன்றிய பகுதிக்குப் போக வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல. வாக்காளர்கள் 1991–92 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது வாக்களிக்க எவ்வித சிரமத்திற்கும் உள்ளானதாக புகார் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. புதிய வாக்குச் சாவடி அமைப்பது குறித்து தற்போது எதையும் செய்யக் கூடாது என்று தேர்தல் ஆணையம் தடை விதித்து உள்ளது. தீவிர முறையில் திருத்தப்படும் புதிய வாக்காளர் பட்டியல் இறுதி

1993 மார்ச் 18]

வெளியீடான 9—3—1993-க்குப் பிறகுதான் புதிய வாக்குச்சாவடிகள் அமைப்பது பற்றி யோசிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் சொல்லியிருக்கிறது. இந்த மாதம் 9-ந் தேதிக்குப் பிறகுதான் அதை எடுக்க வேண்டுமே தவிர அதற்கு முன்னால் வாக்குச்சாவடிகள் அமைப்பது பற்றி எந்த முடிவும் எடுக்கக் கூடாது என்று தேர்தல் ஆணையம் சொல்லியிருக்கிறது. ஆனால் புதிதாக வாக்காளர் பட்டியல் திருத்தப்பட்டு இந்தக் குறிப்பிட்ட ஊர்களிலே போதுமான அளவுக்கு வாக்காளர்கள் எல்லாம் இருப்பார்கள் என்று கருதி அங்கே தனி வாக்குச்சாவடி அமைப்பதன் மூலம் பொது மக்களுக்கு நன்மைகள் ஏற்படும் என்று தெரிந்தால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்தக் குறிப்புகளைத் தந்து தங்களுக்கு இருக்கின்ற சங்கடங்களைக் குறிப்பிடுவார்களேயானால் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக கோரிக்கை இங்கே அரசுக்கு வரும். அதனை அரசு தேர்தல் ஆணையத்திற்குச் சொல்லலாம். அந்த வகையிலே இப்போது நாங்கள் விரைவிலே ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும் கேட்க இருக்கிறோம். வாக்குச்சாவடிகளைத் திருத்தி அமைப்பது அல்லது பெருக்குவது என்பது பற்றிய குறிப்புகளை கொடுக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையை முறையோடு, அதில் எவ்வளவு வாக்காளர்கள் இருக்கிறார்கள் என்று தகுதியினுடைய அடிப்படையில் தனி வாக்குச் சாவடி அமைக்க தகுதி இருக்குமானால் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்கு விரைவில் எழுதி அனுப்பினால் அரசு அது குறித்து தேர்தல் ஆணையத்திற்கு பரிந்துரை செய்யும்.

முற்பகல் 10—05.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 700 வாக்காளர்கள் இருந்தால்தான் ஒரு வாக்குச் சாவடி அமைக்க முடியும் என்று அரசியல் சட்டத்தில் இருப்பதாக நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் வாக்களிக்கின்ற உரிமையை நாம் அரசியல் சாசனப்படி கொடுத்திருக்கிறோம். ஆனால் அவர்கள் வந்து வாக்களிக்க முடியாத சூழ்நிலையில் இருக்கின்றார்கள். எல்லா மக்களுக்கும் வாக்களிக்கின்ற உரிமை அருகிலேயே இருக்கின்ற பொழுது, மலை வாழ் மக்களுக்கென்று சிறப்புத் தன்மை இருக்கிறது. அரசாங்கத்தை எடுத்துக் கொண்டால், மலை வாழ் மக்கள் என்று சொன்னால் அவர்களுக்குப் பல வகைகளிலே, சிறப்புத் தன்மைகளை சலுகைகளைக் காட்டுகிறோம். அந்த வகையில் மத்திய அரசிடம் எழுதியாவது அல்லது தேர்தல் கமிஷனுக்கு எழுதியாவது மலைவாழ் மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதிகளிலே வாக்குச் சாவடிகளை அமைத்தால் சரியாக இருக்கும். அவர்களும் வாக்களிப்பார்கள். ஏனென்று கேட்டால், அவர்கள் வாக்களிக்கவே வருவது கிடையாது. ஏனென்றால்

வருவதற்கு வழியில்லை. ஆகவேதான் சொல்லுகிறேன். வாக்குச் சாவடிகளை அங்கே அமைக்கின்ற அளவுக்கு இந்த ஆண்டிலாவது அது நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று அந்த ஊர்களிலே வாக்குச்சாவடி அமைக்க வேண்டுமென்றால் என்ன முறையை மேற்கொள்ள வேண்டுமென்று விரிவாகவே நான் எடுத்துச் சொன்னேன். ஆகவே, கொள்கை அடிப்படையிலே மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே எவ்வளவு வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச் சாவடி வைக்கலாம் என்பதற்கு விதிமுறைகளையெல்லாம் தேர்தல் ஆணையம் வகுத்து வைத்திருக்கிறது. அந்த விதிமுறைகளினுடைய அடிப் படையிலேதான் இப்போது தொகுதிகளிலேயும் வாக்குச்சாவடி கள் அமைக்கின்ற பணிகள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு தேர்தலையும் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால் மக்களுடைய சௌகரியத் தைக் கருதி வாக்குச் சாவடிகளுடைய எண்ணிக்கை தேர்தலுக் குத் தேர்தல் கூடுதலாக ஆக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையும், தொலைவிலே சென்று வாக்களிக்கின்ற தொல்லை குறைக் கின்ற வகையிலும்தான் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

ஆகவே, ஒருவருக்கு உரிமை இருக்கிறது என்று நமக்குத் தெரியும். அந்த உரிமையை முறைப்படி அவரவர்கள் பயன் படுத்த வேண்டும். இல்லாவிட்டால் ஒரு குடும்பத்திலே இருக் கிற பேரன், பேத்தி எல்லோரையும் கணக்கெடுத்துப் பார்ப் போமேயானால், 50 பேர் இருக்கிறார்கள் என்பதற்காக என்னுடைய வீட்டிலேயே ஒரு வாக்குச்சாவடியை வையுங்கள், நாங்கள் இங்கேயே வாக்களித்து விடுகிறோம் என்று சொல்ல ஆரம்பிப்பார்களேயானால் அது எங்கேயோ போய் முடிந்து விடும். ஆகவே, குறிப்பிட்ட எண்ணிக்கையினுடைய அடிப் படையிலேதான் வந்து சேருவதற்கான வசதிகள் மற்றவை களைக் கண்டறிய வேண்டும். ஆகவேதான், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, அங்கு ஒரு வாக்குச்சாவடியே அமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா என்று அவர் பரிந்துரை செய்வாரே யானால் அரசு அதைப் பரிசீலித்து தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கும் என்று நான் முதலில் சொன்னேன். அந்தப் பணியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முறையோடு, அக்கறையோடு, கடமையுணர்ச்சியோடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 122, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு சட்ட அமைச்சர்.